

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி ஒன்றியம் கணக்கன்குப்பம், மேல்மலையனூர் ஒன்றியம் சாத்தாம்பாடி ஊராட்சியில் வாக்காளர்கள் இடத்தில் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர்கள்செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்பிரமணியன் உள்ளனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்லாசியுடன் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. விழுப்புரம், நாப்பாளயர் தெரு, புனித சேவியர் ஆலயத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

### அ.தி.மு.க.வின் 2026 தேர்தல் அறிக்கையில் உள்ள கான்கிரீட் திட்டத்திற்கு கடும் கண்டனம்!

# கீழ் பவானி கால்வாயைப் பாதுகாக்க தி.மு.க. உறுதி!

## கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

சென்னை ஏப். 20 - அ.தி.மு.க.வின் 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் கீழ் பவானி கான்கிரீட் திட்டத்திற்கு (LBP) வாய்க்காலைப் புதுப்பிப்பதாகக் கூறப்பட்டுள்ள வாக்குறுதிக்கு கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை யும் மற்றும் சூழலியல் மண்டலத்தையும் சிதைக்கும் எந்தவொரு திட்டத்தையும் தி.மு.க. அனுமதிக்காது என்று அவர் மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2012ம் ஆண்டு முதல், கீழ் பவானி வாய்க்காலை கான்கிரீட் மயமாக்கும் இந்த தேவையற்ற திட்டம், ஆயக்கட்டு விவசாயிகளுக்கு பெரும் வேதனையையும், மன அழுத்தத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி வருகிறது. உலக வங்கி நிதியுதவிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஆய்வு மற்றும் விவசாயிகளுடன் கலந்தாய்வு கோரியும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, அப்போதைய முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்களால் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது.

இருப்பினும், 2020ல் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, நமது சுற்றுச்சூழல் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் மீண்டும் LBP கான்கிரீட் திட்டத்திற்கான அரசாணையை வெளியிட்டது.



அரியலூர் நகரம் சி.எஸ்.ஐ தேவாலயத்தில் அரியலூர் தொகுதி மேலிட பொறுப்பாளர் வளவனூர் ப.அன்பரசு FCRA ( FOREIGN CONTRIBUTION REGULATION ACT) வெளிநாடு நிதியளிப்பு திருத்த சட்டம் குறித்து உரையாற்றி அரியலூர் தொகுதி வெற்றி வேட்பாளர் லதா பாலு அவர்களுக்காக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார் நகரச் செயலாளர் முருகேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

2021 ல் தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கீழ் பவானி பாசன விவசாயிகளின் நலன்கள் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படாது என்று உறுதி அளித்தார், விவசாயிகளின் மீதான அவரது அக்கறையும், தொலைநோக்குப் பார்வையுமே இத்திட்டத்தைத்தடுத்து நிறுத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தது. அவரது வழிகாட்டுதலின் கீழ், அமைச்சர் சு.முத்துசாமி அவர்களின் ஆதரவுடன், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 40க்கும் மேற்பட்ட கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. விவசாயிகளின் விருப்பங்கள் 100% செயல்படுத்தப்பட்டுள்ளது.

முத்தரப்பு பேச்சுவார்த்தையின் போது சில விவசாயிகள் ஒப்பந்த செயல்முறையை முழுமையாக முடிக்கவில்லை என்றாலும், அசல் வாய்க்காலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமலும், மண் வாய்க்காலை எந்த இடத்திலும் கான்கிரீட்டாக மாற்றாமலும் இத்திட்டம் முறையாக முடிக்கப் படுவதை தி.மு.க. அரசு உறுதி செய்துள்ளது.

“எங்கள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றியுள்ளார். இது விவசாயிகளுக்கான அரசு என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார், கீழ் பவானி வாய்க்கால் விவசாயிகளுக்கு நாங்கள் மீண்டும் உறுதி அளிக்கிறோம், உங்கள் வாழ்வாதாரத்தை சிதைக்கும் இத்தகைய திட்டங்களை தி.மு.க. அரசு ஒருபோதும் அனுமதிக்காது. அமைச்சர் சு.முத்துசாமி அவர்களின் தலைமையிலான மாவட்ட நிர்வாக மும், நானும் எப்போதும் உங்களுக்கு அரணாக இருப்போம். “சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் திட்டத்தை அ.தி.மு.க. மீண்டும் கொண்டு வரத்துடிக்கும் வேளையில், கீழ் பவானி வாய்க்காலின் அசல் தன்மையை வருங்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கும் கேடயமாக தி.மு.க. விளங்கும் என்று கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு வளர்ந்தால்தான்

# இந்தியா வளர முடியும் என்ற நிலையை உருவாக்கியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## திருப்பூரில் – பீகார் முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் பிரச்சாரம்!

திருப்பூர், ஏப். 20 –

திருப்பூரில் திமுக தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில், பீகார் மாநில முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் பேசியதாவது:



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன், எங்களது பயணம் இன்று, நேற்று ஏற்பட்டது அல்ல. அது, நீண்ட, நெடிய பயணம். தமிழக முன்னாள் முதல் வர் கலைஞர் , எனது தந்தை லாலு பிரசாத் யாதவ் காலத்தில் இருந்தே எங்களது பயணம் துவங்கியது.

தமிழ்மண்ணில் சமூக நீதி நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. பீகாரில், தமிழகத்தை பின்பற்றி சமூக நீதி நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு வேகமாக முன்னேறி வருகிறது. தொழில்நுட்பம் மூலம் நல்ல வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்து வருகிறது. கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம், மனித வள மேம்பாடு என எல்லா துறைகளிலும் தமிழ்நாடு வளர்ந்து நிற்கிறது.

**பிரதமருக்கு தகுந்த பாடம்!**

தமிழ்நாட்டில் தரமான கல்வி வழங்கப்படுகிறது. நாட்டின் ஒட்டுமொத்த ஜி.டி.பி வளர்ச்சியில் தமிழ்நாடு இரண்டாவது இடம் பிடித்துள்ளது. ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி யில் இருக்கிறது. தனி நபர் வருமானத்திலும் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. தமிழ் நாடு வளர்ந்தால் தான் இந்தியா வளர முடியும் என்ற நிலையை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உருவாக்கி உள்ளார்.

இந்தியாவில் உள்ள முன்னணி அரசியல் கட்சி தலைவர்களின் கோரிக்கையை புறம் தள்ளி, நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயன்றார் பிரதமர் மோடி. ஆனால், அவருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தகுந்த பாடம் புகட்டி உள்ளார்.

தமிழக சட்டமன்ற தேர்தல் பிஸிகளுக்கு இடையே அவர், டெல்லிக்கு ஆட்டம் காட்டியுள்ளார். அவரது செயல், எங்களைப் போன்ற இளம் அரசியல் தலைவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. அவர், எங்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார்.

அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரை தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு எல்லா துறை களிலும் வளர்ச்சி கண்டு வருகிறது. இதை, எனது தந்தை அடிக்கடி நினைவு கூறுவார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழக மக்கள் எப்போதும். துணை நிற்க வேண்டும். அவரது கரத்துக்கு வலு சேர்க்கும் வகையில் நாங்களும் இணைந்து பயணிப் போம்.

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் பேசினார்.

# சைதையில் மா.சுப்பிரமணியன் வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப்.20-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் (18-4-2026-சனிக்கிழமை) காலை 7 மணியளவில் சைதை மேற்குப் பகுதி 140வது வட்டத்தில் புனரமைக்கப்பட்ட கோதண்டராமர் கோயில் குளத்தைச் சுற்றி நடைப்பயிற்சி மேற்கொண்டார். அங்கு நடைப்பயிற்சிக்கு வந்தோரிடம் உரையாடி, வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். அதற்குப் பின்பு காலை சிற்றுண்டிக்குப்பிறகு காலை 9 மணியளவில் சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் உள்ள காமராஜபுரம், கங்கையம்மன் கோயில் தெரு, நேருநகர் மெயின் ரோடு, பூவிருந்தவல்லி சாலை, ஆலந்தூர் சாலை, 170வது வட்டத்தில் சித்ரா நகர், ஏரிக்கரை சாலை, ஜோதியம்மாள் நகர், வெங்கட்டாபுரம் ஆகிய இடங்களில் வாகனத்தில் சென்று வாகனம் ஆங்காங்கே பொதுமக்கள் கூடியுள்ள இடங்களில் திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கக்கூடிய உலகநாடுகளையே வியந்து பார்த்து, அந்தத் திட்டங்களை தங்கள் நாட்டிலும் ஏற்படுத்தியிருக்கக்கூடிய “காலை உணவுத்திட்டம்” 5ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் வழங்கயிருக்கிறத் திட்டம், “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கயிருப்பதையும், அதே போன்று “இல்லத்தரசிகள் திட்டம்” - 8 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்களுக்குத் தேவைப்படுவதை தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் திட்டம், அதேபோன்று “புதுமைப் பெண்திட்டம்”, “தமிழ்ப்புதல்வன் திட்டம்” மேற்படிப்பிற்கான நிதிஉதவித் திட்டம், முதியோர் உதவித்தொகை ரூ.1200 லிருந்து 2000 ஆயிரமாக உயர்த்தி வழங்கயிருக்கிறத் திட்டம் போன்ற திட்டங்களை எடுத்துரைத்து வாக்கு சேகரித்தார்.



திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற, சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் தா.உதயசூரியன், சங்கராபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட தேவபாண்டலம் மற்றும் அ.பாண்டலம் ஆகிய பகுதிகளில் திராவிட மாடல் அரசின் 5ஆண்டு கால சாதனை திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார், அப்போது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சொக்கலிங்கம்

**ஏப்ரல் 20 (2000)**



**தன் இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே தொடர்பு கொள்ள, பழகுகிற வாய்ப்பும் பெற்றிருந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, மக்கள் பணியாற்றுவதிலும், இந்த இயக்கத்தை வளர்ப்பதிலேயும், கொள்கையைக் காப்பதிலேயும் முன்நின்றவர்.**

**இவர் காஞ்சிபுரம் மாவட்டக் கழக துணைச் செயலாளராக பணியாற்றியவர்.**

**மாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1977, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்போரூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்தபோது, உடன் சிறை சென்று 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.வெ. நாராயணசாமி

**ஏப்ரல் 20 (2012)**



**தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் – திருவொற்றியூர் நகர்மன்றத் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர் “மா.வெ.நா.” என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர்.**

**திருவொற்றியூர் பகுதியிலே உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிற் சங்கத் தலைவராக பல ஆண்டுகாலம் பணியாற்றி, தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக பெரிதும் பாடுபட்டவர்.**

**மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**“ மிசா கொடுமைக்கு ஆளான போதிலும், கொண்ட கொள்கையில் உறுதியோடு பணியாற்றியவர் மா.வெ.நா.!” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**